நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்,
அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திரு. சி.மதிவாணன் B.E

ந.க. எண் 2706/2020 திலிமா 3

நாள் 13.01.2021

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - திருநெல்வேலி மாவட்டம் - திசையன்விளை வட்டம்/ கிராமம் - சர்வே எண் 407/2B1A,2B1B,2B2 -ல் (23425.00 சமீ) பரப்பளவில் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

படிக்க :

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018
4. அரசாணை எண் 21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3)) துறை, நாள் 05.02.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13193/17 எல் ஏ 2, நாள் 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017 மற்றும் 07.01.2019
6. திரு.S.சாமுவேல் மற்றும் S.இமானுவேல்,என்பவர் இணையதள பதிவு எண் DTCP/L/0790846/2017, பெறப்பட்ட நாள் 13.03.2020, 6.10.2020 மற்றும் 09.01.2021
7. அரசாணை எண் 100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 01.07.2019
8. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 05.01.2021
9. சாலை மற்றும் பூங்கா ஒப்படைப்பு, திசையன்விளை சார்பதிவாளர் அலுவலகம், தானபத்திரம எண் 63/2021 நாள். 08.1.21.

--------

**ஆணை**

பார்வை 1, 2, 3 மற்றும் 4-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 5-ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை 6-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம்/கிராமம், சர்வே எண் 407/2B1A,2B1B,2B2 -ல் (23425.00 சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற

குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின் படி, பார்வை 8-ல் கண்ட 05.01.2021 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, பார்வை 9-ல் கண்ட தானபத்திரம் எண் 63/2021, நாள் 08.01.2021 -ல் சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலி-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ(மு)/மா(திலி) எண் 07/2021** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 23200 (5.73 ஏக்கர்) |
| மனைகளின் மொத்த எண்ணிக்கை | - 116 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை (மனைஎண்கள்-10-11) | -3 |
| விற்கப்பட்டாத மனைகளின் எண்ணிக்கை (மனைஎண்கள்-1-9,13-116) | -113 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | - 16543.30சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | - 2033.58 சமீ (12.49%) |
| பூங்கா பரப்பு | - 1766.37 சமீ |
| திறவிடம் | - 267.21 சமீ |

(தானபத்திரம் எண் 63/2021, நாள் 08.01.2021 -ல் சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலி-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. **பரிசீலனைக்கட்டணம்**

விற்கப்பட்டாத மனைகளின் மொத்த எண்ணிக்கை 113 ல் 104 மனைகளுக்கு இணையதளம் (DTCP/L/0790846/2017dated.16.11.18 மற்றும் 2 எண்ணம் ) மூலம் ரூ.500/- வீதம் ரூ 52000/- மற்றும் 9 மனைகளுக்கு இவ்வலுவலக வங்கி கணக்கு எண் : SBI Bank Acc No: 10481947367 ல் ரூ.500/- வீதம்- நாள் 13.01.2021 அன்று ரூ 4500/- செலுத்தப்பட்டுள்ளது.

**வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்**

பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணையின் படி வரன்முறைப்படுத்தும் கட்டணமும் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு

0217 Urban Development – 60 Other Urban Development Scheme-800.Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots –DTCP
27 Non Taxation Fees – 30 Regularisation
(DPC 0217 60 800 AT 2730)

ஆ. வளர்ச்சிக்கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக்கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ----------------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

13/01/2021

இணை இயக்குநர்,
மாாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

**பெறுநர்**

செயல் அலுவலர்
திசையன்விளை பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்.

**நகல்**

1. திரு.S.சாமுவேல் மற்றும் S.இமானுவேல்,No: 3/11 ,S.D.K. Complex,இட்டமொழி, திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம்.(செயலாணை மட்டும்)
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு)
3. திசையன்விளை சார்பதிவாளர் அலுவலகம் , திருநெல்வேல், திருநெல்வேலி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு)
4. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை
5. தொழில் நுட்ப வைப்பறை

## திசையன்விளை சிறப்பு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் (பொ) செயல்முறைகள்

**முன்னிலை : திரு. சா. கிறிஸ்டோபர்தாஸ்**

ந.க.எண். 320/2019

நாள் 16. 02. 2021

பொருள்

மனை வரன்முறை – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை பேரூராட்சி – திசையன்விளை கிராமம் சர்வே எண் 407/2B1A, 2B1B , 2B2 இல் 23425. 00 ச.மீ. (5.73 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள விற்கப்படாத மனை எண் 18, 19 மனையை வரன்முறைப்படுத்திடல் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டது இரண்டு மனையை மட்டும் வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை

1. அரசாணை நிலை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04/05/2017
2. அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 02.05.2018
4. அரசாணை எண் 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD4(3)) துறை நாள் 05.02.2019
5. திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2706/2020/திலிம3 நாள்05.01.2021
6. திரு. சாமுவேல் கோவில்பிள்ளை, மருதநாச்சிவிளை தெரு, திசையன்விளை கடிதம் நாள் 08.01.2021
7. தொடர்புடைய ஆவணங்கள்

-----

திருநெல்வேலி மாவட்டம், தற்போது திசையன்விளை வட்டம், திசையன்விளை பேரூராட்சி, திசையன்விளை கிராமம், சர்வே எண் 407/2B1A, 2B1B , 2B2 இல் 23425. 00 ச.மீ. (5.73 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ.(மு)/ம(திலி) எண் DTCP/L/0790846/2017 என என எண்ணிட்டு பார்வை 5 இல் கண்டபடி வரன்முறைப்படுத்திட திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களால் 05.01.2021 அன்று கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மேற்கண்ட மனைப்பிரிவில் மனை எண் 18,19 மனையை மட்டும் முறைப்படுத்திட உரிய கட்டணங்கள் மனுதாரர் மூலம் செலுத்தப்பட்டு அத்தாட்சி பெறப்பட்டுள்ளது.

| மனை எண் | கூராய்வு கட்டணம் மனு செய்யும் போது செலுத்தப்பட்டுள்ளது | வரன்முறை கட்டணம் | வளர்ச்சிக் கட்டணம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 19 | ரூ 500/– பஞ்சாப் நேஷனல் வங்கி, பாளையங்கோட்டை | 6016 | 10050 | 16066 |
| 20 | ரூ 500/– பஞ்சாப் நேஷனல் வங்கி, பாளையங்கோட்டை | 6016 | 10050 | 16066 |
| மொத்தம் | | 12032 | 20100 | 32132 |

மேற்படி கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளதால், பார்வை **1, 2, 3** மற்றும் **4** இல் காணும் அரசாணை மற்றும் பார்வை **5** இல் காணும் திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி மாவட்டம், இராதபுரம் வட்டம், திசையன்விளை சர்வே எண் 407/2B1A, 2B1B , 2B2 இல் 23425. 00 ச.மீ. (5.73 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள மனை எண் **18,19** வது மனையை மட்டும் வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 1, 2, 3 மற்றும் 4 இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள மற்றும் பார்வை 5 இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை அனைத்தும் இவ்வாணைக்கு பொருந்தும்.

16/2/2021

செயல் அலுவலர் (பொ)
சிறப்பு நிலை பேரூராட்சி
திசையன்விளை

16/2/21

பெறுநர்
திரு. சாமுவேல் கோவில்பிள்ளை
மருதநாச்சிவிளைரோடு,
திசையன்விளை

நகல்

1. துணை இயக்குநர் அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, திருநெல்வேலி
2. சார்பதிவாளர், திசையன்விளை